## உலக உயர்கல்வி முனையமாக

# மலேசியா உருமாற்றம் பெற்று வருகிறது



*கோலாலம்பூர்,ஜூன் 22- அமெரிக்க உள்துறை அமைச்சு வெளிநாட்டு மாணவர்கள் விசாவுக்கு விண்ணப்பம் செய்வதை மீண்டும் தொடங்கியிருக்கிறது.*

ஆனால் அனைத்து விண்ணப்பதாரர்களும் இப்போது அவர்களின் சமூக ஊடகக் கணக்குகளை அரசாங்கத்தின் பார்வைக்குத் திறந்து விட வேண்டும் என்பது ஒரு புதிய தேவையாகவும் நிபந்தனையாகவும் விதிக்கப்பட்டிருக்கிறது.

ஏற்கெனவே வெளிநாட்டு மாணவர்கள் அமெரிக்காவில் உயர்கல்வி கற்பதற்கு அதிபர் டொனால்ட் டிரம்ப் நிர்வாகம் கடந்த மாதம் தற்காலிகத் தடை விதித்திருந்தது.

வெளிநாட்டு மாணவர்கள் புதிய விசா நேர்காணல்களுக்கு அழைக்கப்படுவதும் நிறுத்தப்பட்டது. சமூக ஊடகங்களில் வெளிநாட்டு மாணவர்களின் செயல் நடவடிக்கைகளைத் தெரிந்துகொள்ளும் வகையில் விசாவுக்கு விண்ணப்பம் செய்யும் மாணவர்கள் அவர்களின் சமூக ஊடக கணக்குகளைத் தெரிவிக்க வேண்டும் என்பது கட்டாயமாக்கப்பட்டு மாணவர்களின் புதிய விசா விண்ணப்பங்களை மீண்டும் தொடங்கியிருக்கிறது.

அமெரிக்க அரசாங்கத்தின் இந்த நடவடிக்கை அந்நாட்டுக்கு உயர்கல்வியை மேற்கொள்வதற்குச் செல்லும் கனவில் இருந்த பல மாணவர்களுக்கு மிகப் பெரிய அதிர்ச்சியைத் தந்திருக்கிறது. அமெரிக்காவில் படிக்க வேண்டும் என்ற நம்பிக்கையையும் சற்று சிதற வைத்திருக்கிறது. அதேசமயத்தில் விசா நேர்காணல்களுக்காக அமெரிக்க துணைத் தூதரகங்கள் மீண்டும் எப்போது திறக்கும் என்று உலகம் முழுவதிலும் உள்ள மாணவர்கள் ஆவலோடு காத்திருக்கின்றனர்.

கல்வியாண்டு தொடங்குவதற்கு முன் தங்கும் இடம், பயணம் போன்றவற்றை ஏற்பாடு செய்ய வேண்டிய நிலையில் மாணவர்கள் விசா நேர்காணல் அழைப்புக்கு காத்திருக்கின்றனர்.

சீனா, இந்தியா, மெக்சிகோ, பிலிப்பைன்ஸ் ஆகியநாடுகளைச் சேர்ந்த மாணவர்கள் விசா முன்பதிவு வலைத்தளங்களைக் கூர்ந்து கவனித்து வருகின்றனர். தங்களுக்கு அழைப்பு வந்திருக்கிறதா என்பதைத் தெரிந்து கொள்வதற்கு அவர்கள் மிகுந்த ஆர்வத்துடன் உள்ளனர். இருப்பினும் தங்களுடைய சமூக ஊடகக் கணக்குகளின் விவரங்களை முழுமையாகத் தெரிவிக்க வேண்டும். அரசாங்கம் அதனைப் பார்வையிடுவதற்கு அனுமதிக்க வேண்டும் என்ற புதிய நிபந்தனைகள் மாணவர்களுக்கு புதுவகையான சிக்கலையும் மன உளைச்சலையும் தந்திருக்கிறது.

மேலும் வெளிநாட்டு மாணவர்கள் 15 விழுக்காட்டுக்குக் குறைவாக உள்ள கல்லூரிகளில் வெளிநாட்டு மாணவர்களுக்கு வாய்ப்பளிப்பதற்கு முன்னுரிமை தரும்படி உள்துறை அமைச்சு துணைத் தூதரகங்களுக்கு உத்தரவிட்டுள்ளது என்று இந்த விவகாரத்தில் நன்கு பரிச்சயமுள்ள ஓர் அமெரிக்க அதிகாரி தெரிவித்தார்.

இதுபற்றிய விவரங்கள் ரகசியமாக வைக்கப்பட்டுள்ளன என்று குறிப்பிட்ட அவர், அமெரிக்காவில் உள்ள 200க்கும் அதிகமான பல்கலைக்கழகங்கள், கல்லூரிகள் 15 விழுக்காட்டுக்கும் குறைவான மாணவர்களைப் பதிவு செய்துள்ளன என்றார். இது 2023 மத்திய கல்வி தரவுகளில் இருந்து கிடைக்கப்பெற்றிருக்கும் புள்ளிவிவரங்கள் என்பதையும் அவர் சுட்டிக்காட்டினார்.

### மலேசியா உலகக் கல்வி முனையமாக உருமாற்றம்

இந்நிலையில் உலகம் முழுவதும் உள்ள பல்வேறு நாடுகளைச் சேர்ந்த மாணவர்கள் உயர்கல்விக்காக மலேசியாவை நோக்கி படையெடுக்கத் தொடங்கியிருக்கின்றனர். மலேசியப் பிரதமர் டத்தோஸ்ரீ அன்வார் இப்ராஹிம் தலைமையிலான மடானி அரசாங்கம் மலேசியாவில் உயர்கல்வியைத் தொடங்க விரும்பும் உலக நாடுகளின் மாணவர்களுக்கு சிறப்புச் சலுகைகள் வழங்குவது இந்த ஈர்ப்புக்கு முக்கியக் காரணமாக இருக்கிறது.

மலேசியாவில் உயர்கல்வி வழங்கும் பல்கலைக்கழகங்கள், கல்லூரிகள் மிகச்சிறந்த அடிப்படை வசதிகளை வழங்குவது, மாணவர்கள் நலத்திட்டங்கள் போன்றவை உலக நாடுகளிலிருந்து மலேசியாவுக்கு மாணவர்கள் படையெடுப்பதற்கு இன்னொரு முக்கியக் காரணமாகவும் இருக்கிறது.

அமெரிக்க அரசாங்கம் விதித்து வரும் கெடுபிடிகள்போல் அன்றி மலேசியாவில் கல்வி சுதந்திரம் மிகவும் சிறப்பாக இருக்கிறது. கட்டணமும் குறைவாக இருக்கிறது என்பது மற்றொரு காரணம் ஆகும். இந்நிலையில் மலேசியா வெளிநாட்டு மாணவர்களுக்கான உயர்கல்வி முனையமாக உருமாற்றம் கண்டு வருவதைக் கண்கூடாகக் காண முடிகிறது.

வெளிநாட்டு மாணவர்களுக்கான உயர்கல்வியில் மலேசியாவின் தாராளப் போக்கு இந்த உருமாற்றத்திற்கு அடிப்படைக் காரணமாக இருக்கின்றது.

KEMENTERIAN PERALIHAN TENAGA DAN TRANSFORMASI AIR

Suruhanjaya Tenaga
Energy Commission

PELARASAN KOS BAHAN API SECARA AUTOMATIK (AFA) MENGGANTIKAN ICPT

Mekanisme Pelarasan Kos Bahan Api Secara Automatik (*Automatic Fuel Adjustment* - AFA) adalah satu proses penentuan kos bahan api yang lebih tepat berdasarkan unjuran harga bahan api pasaran semasa. Mekanisme ini menggantikan Pelepasan Kos Tidak Berimbang (ICPT).

CIRI-CIRI UTAMA

- Pelarasan secara bulanan
- Mencerminkan harga pasaran semasa
- Petunjuk harga yang lebih tepat

FAEDAH UNTUK SEMUA

- Kadar pelarasan yang lebih telus kepada pengguna
- Meminimumkan kadar pelarasan yang mendadak
- Menggalakkan kecekapan penggunaan tenaga

Untuk maklumat lanjut, layari **www.mytnb.com.my/tariff**

Tertakluk kepada Semenanjung Malaysia sahaja.